2009 பிப்ரவரி 20]

கம்ப்யூட்டர் ஆய்வகங்களையெல்லாம் கொடுத்திருக்கிறோம்--அங்கே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை, பள்ளி அமைந்திருக்கக்கூடிய சூழல் போன்றவற்றைக் கருத்திலே எடுத்துக்கொண்டு, நிச்சயமாக அந்தத் தேவைகளை உணர்ந்து, படிப்படியாக அரசு அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

சாலை வசதி

***42—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, மலைவாழ் மக்கள் வாழும் சித்தேரி ஊராட்சிக்குட்பட்ட கலசப்பாடி, மண்ணூரர், அரசநத்தம் போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

சித்தேரி ஊராட்சியிலுள்ள கலசப்பாடி கிராமத்திற்கு சித்தேரி கிராமத்திலிருந்து நொச்சிக்குட்டை, கருக்கம்பட்டி வழியாக 20 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை உள்ளது. சித்தேரி கிராமத்திலிருந்து மண்ணூரர் கிராமத்திற்கு கல்நாடு கிராமம் வழியாக 10 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை உள்ளது. மேற்கண்ட சாலைகளை மேம்படுத்த வேண்டுமேயானால், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, ஊரக வளர்ச்சித் துறையினரால், 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்ட வழிகாட்டுதலின்படி கருத்துரு அனுப்பப்படுமேயானால், மைய அரசின் அனுமதி பெற்றுத் தரப்படும். கலசப்பாடி கிராமத்திலிருந்து அரசநத்தம் கிராமத்திற்கு பட்டா நிலங்களின் வழியாக ஊராட்சி சாலை உள்ளது. எனவே, மேற்படி ஊராட்சி அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[2009 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை சம்பந்தப்பட்ட பகுதிகளிலே சாலைகள் அமைப்பது என்பது மிகப் பெரிய, அரிதான காரியமாக இருக்கிறது. குறிப்பாக, எங்களுடைய திருத்தணி திருக்கோயிலின் மலைப் பாதையை எடுத்துக்கொண்டால், முதல் மலைப் பாதை பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது. அந்தத் திருக்கோயிலுடைய பின்புறம் உள்ள ஒரு சில பகுதிகள் வனத் துறைக்குச் சொந்தமாக வருவதனால், இன்னொரு மலைப் பாதை அமைவதிலே பெரிய சிக்கல் இருக்கிறது. இந்த மலைப் பாதை என்பது, கோயிலுக்குச் செல்கின்ற பாதை மட்டுமல்ல; அரக்கோணம் சாலைக்குச் செல்கின்ற ஒரு bye-pass சாலையாக, புறவழிச் சாலையாக அமைய பெரிய வாய்ப்பு இருக்கிறது. இது குறித்து ஏற்கெனவே வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, இது குறித்து வனத் துறை என்ன செய்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலுள்ள வனப் பகுதி, காப்புக் காட்டினுள் செல்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே அனுமதிக்கப்பட்ட வழித்தடம் இருந்தால்தான், நாம் அதை விரிவுபடுத்துவதற்குக்கூட மைய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டும். அவர் சொல்கின்ற இடத்திலே செங்குத்தாகப் பாதை அமைக்க வேண்டியிருக்கின்ற காரணத்தினால், இன்னும் கொண்டை ஊசி வளைவு கொண்ட பாதை அமைப்பதற்கு அதிக அளவிலே நிலம் தேவைப்படும். நான் பல முறை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். வனச் சட்டம் மிகக் கடுமையாக இருக்கிறது. 1980 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, ஒரு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டுமேயானால், அதற்கு இரு மடங்கு நிலத்தை நாம்

2009 பிப்ரவரி 20]

தரவேண்டும். அதிலே 10 ஆண்டுகள் மரங்கள், செடிகள் வளர்ப்பதற்காகப் பணம் கட்டவேண்டும். நிலத்தினுடைய மதிப்பைத் தரவேண்டும். அதன் பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த இடத்தைத் தவிர இந்தப் பணி மேற்கொள்வதற்கு வேறு இடம் இல்லையென்று ஒரு சான்றிதழ் தரவேண்டும். இவையெல்லாம் பெற்று, அந்த உரிய துறைகள் அனுப்புமேயானால், அதை மைய அரசுக்கு அனுப்பி, அனுமதி பெற்றுத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியிலே மலையும், மலைசார்ந்த பகுதியும் அதிகமாக இருக்கின்றது. 18 ஆம் தேதி ஏமனூர் கிராமத்திலே 10 வீடுகள் தீப்பிடித்து எரிந்தன. அங்கு தீயணைப்புத் துறை செல்வதற்கு எந்த வழியும் இல்லாததால், அங்குள்ள மக்களே அந்தத் தீயை அணைத்திருக்கின்றார்கள். அதற்கு ஏமனூர் கிராமம், அலகிட்டு, ஏரிமலை போன்ற பகுதிகளுக்கு சாலை வசதி செய்து கொடுப்பதற்கு வனத் துறை சார்பாக மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரையை விரைந்து செயல்படுத்தி, அந்த மலைப் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் சாலை வசதி செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதிகளில் சாலை அமைக்க, பிக்கினிஹள்ளி, படனமல்லி பகுதிகளில் சாலை அமைப்பதற்காகக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. மைய அரசினுடைய அனுமதி பெற்றவுடன், உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதுபோன்ற தீ விபத்துகளில் சில நேரங்களில் அந்தப் பகுதிகளுக்கு எங்களுடைய துறையின் அலுவலர்கள் செல்வதற்குக்கூட பல இன்னல்கள் இருக்கின்றன. ஆகவேதான், இந்தத் துறையின் சார்பாகக்கூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அனுமதி பெற்று, இதுபோன்ற அவசர நேரங்களில் சென்று, அந்தத் தீயை அணைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு helicopter வாங்கலாமா என்பதற்கு அரசின் சார்பாக மாண்புமிகு முதல்வர்

அவர்களிடம் அனுமதி பெற்று, அதைப்பற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

சத்துணவுக் கூடம்

***58089—திரு. ஆர். சின்னசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, சரவணம்பட்டி பேரூராட்சியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, சரவணம்பட்டி பேரூராட்சியில் மொத்தம் நான்கு பள்ளிகள் உள்ளன. நான்கு பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நான் 2006-ல் சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன் போட்டது. மூன்று வருடம் கழித்து வந்திருக்கிறது. அதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை, இந்தக் கேள்வி போட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கோரிக்கை நிறைவேறியாகிவிட்டதென்றால் பேசாமல் உட்காருங்கள். வினா வரிசை எண் 39. (குறுக்கீடு) திரு. சின்னசாமி, சொல்லுங்கள், தேவையில்லாததைப் பேசக்கூடாது. தேவையானதை மட்டும் பேசுங்கள்.